# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 17 வியாழக்கிழமை 03.10.2024 கதிர் 376



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# ஒற்றையாட்சியை பாதுகாத்தவாறே அநுர குமார பயணிக்க வேண்டும்

## விமல் வீரவன்ச வலியுறுத்துகிறார்



"சர்வதேச சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றாது, ஒற்றையாட்சியைப் பாதுகாத்தப்படி தேசிய மக்கள் சக்தி பயணிக்க வேண்டும்" என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் எம். பி. விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கட்சியொன்று ஆட்சிப்பீடமேறிய பின்னர் ஆரம்ப காலம் என்பது இன்பமாகவே இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிகாலத்திலும் ஆரம்பகாலம் என்பது சுவையானதாக இருந்தது. நாட்கள் செல்லத் செல்லத்தான் உண்மையான முகம் எது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

6▶

# காஸ் சிலிண்டரில் ஐ.தே.க. போட்டி

இலங்கை அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலொன்றின்போது 'யானை' சின்னம் இல்லாமல் நடைபெறும் முதல் தேர்தலாக இம்முறை தேர்தல் அமையவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்பினர் பொதுச் சின்னமொன்றின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி யானை சின்னம் காஸ் சிலிண்டராக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று ஐ.தே.க. தரப்பு தெரிவிக்கின்றது.

இலங்கையில் 1947 ஆம் ஆண்டிலேயே முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையும் பிடித்தது.

1952, 1956, 1960, 1965, 1970, 1977, 1989, 1994, 2000, 2001, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் யானை சின்னத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது.

2010, 2015 பொதுத் தேர்தல்களின்போது கூட்டணி அமைத்து ஐ.தே.க. களமிறங்கி இருந்தாலும் யானை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. 2020 பொதுத் தேர்தலின்போதுகூட யானை சின்னத்திலேயே ஐ.தே.க. தேர்தலுக்கு வந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இம்முறை 'யானை' சின்னத்தைக் கைவிட்டு பொதுச் சின்னத்தில் களமிறங்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவே

6▶



# அரச ஊழியர்களுக்காக பக்கபலமாக இருப்போம்

## சம்பிரதாய அரசியல் பழிவாங்கல்கள் இனிமேல் நடக்காது என்று ஜனாதிபதி உறுதி

வினைத்திறன்மிக்க மக்கள் நல அரச சேவையை உருவாக்க தம்மை அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காக தாம் துணை நிற்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குடிமக்களுக்காகப் பாடுபடும் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை இதுவரை காலமும் இருந்தபோதும் அந்தச் சம்பிரதாயம் இனிமேலும் நடக்காது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

6▶

# ஒரு கோடி ரூபா கொள்ளை! இருவர் அதிரடியாகக் கைது

## யாழில் நடந்த துணிகரச் சம்பவம்



யாழ்ப்பாணம் - மானிப்பாய் சங்குவேலி பகுதியில் வைத்து காணி விற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜையின் ஒரு கோடியே மூன்று லட்சம் ரூபாய் பணம், பெறுமதியான கைத்தொலைபேசி, மற்றும் கடவுச்சீட்டு என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவரை கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கீழ் ஊரெழுப் பகுதியில் வைத்து அதிரடியாக கைது

6▶

# பரீட்சை திணைக்களம் முற்றாக மறுசீரமைக்கப்படல் வேண்டும்

## மோசடியில் ஈடுபட்ட 473 பெயர்கள் வெளியீடு



மோசடிகளை மேற்கோள்காட்டி பரீட்சைகள் திணைக்களத்தை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் தேர்வு தொடர்பான மோசடியில்

6▶


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -




# போதைக்கு எதிராகப் போராட்டம்

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் யாழ். சங்கானை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்னால் நடைபெற்றது.

சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. அந்த மதுபானசாலை அமைக்கவுள்ள இடத்துக்கு அருகாமையில் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், மதத் தலங்கள், குடிமனைகள் காணப்படுகின்றன. எனவே, அந்தப் பகுதியில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "மதுசார விலைகளைக் குறைத்து எமது சமூகத்தை அழிக்க வேண்டாம், போதையற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எமது சமூகத்தை அழிக்கும் மது எமக்குத் தேவைதானா?, முடவனாக விரும்பும் மானிடனே மதுவைக் கையில் எடுக்காதே, இளைய சமூகமே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர், சிறுவர்களையும் மகளிரையும் மதுவுக்கு அடிமைப்படுத்தாதே" எனக் கோஷமிட்டு, பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலர் திருமதி. கவிதா உதயகுமார் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர், சங்கானை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர், வலிகாமம் மேற்கு ஓட்டோ சங்கத்தினர், அந்திரான் தோற்பயிற்சி உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தினர், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்ற தேர்தலையடுத்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமான தீர்மானத்தை அறிவிப்போம் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு சட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக முக்கியஸ்தர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

"நாங்கள் தேவையான அடிப்படை பணிகளை நிறைவு செய்துவிட்டோம், பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவோம்" என ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557



## ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவன பத்தாவது ஆண்டு நிறைவு நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு நிகழ்விலே வவுனியா பிரதேச செயலகத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு சண்முகநாதன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்த நிகழ்விலே நூற்றுக்கு மேற்பட்ட பயனாளிகள் மற்றும் நன்கொடையாளர்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் ஜீவஊற்று நிறுவனத்தின் அறப்பணியாளர்கள் என்று பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துரோகிகளுக்கு வேட்பு மனு இல்லை

## மொட்டுக் கட்சி திட்டவட்டம்

கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு சென்ற எவருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியைக் காட்டிக்கொடுத்த எவரும் மீண்டும் கட்சிக்கு வரமுடியாது. மக்களுக்கு வேண்டாம் என்றால் சலூன் கதவைப் பூட்டுவதற்குத் தயார் என மஹிந்தவும் அறிவித்துவிட்டார். எனவே, அவர்களுக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது.

மொட்டுக் கட்சிக்கு தற்காலிக பின்னடைவே ஏற்பட்டுள்ளது. நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது." - என்றார்.

## குளவி கொட்டி 15 பேர் பாதிப்பு

தலவாக்கலை, அக்கரபத்தன எல்பியன் தோட்டத்தில் நியூபிரஸ்டன் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் 15 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இன்று காலை வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பெண் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலை மலையில் கொழுந்து கொய்துகொண்டிருக்கையிலேயே குளவிகள் கொட்டின.

தொழிலாளர்கள் 15 பேரும் மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 11 பேர் சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வீடுகளுக்குச் சென்றனர்.

எஞ்சிய 4 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஒரு குடையின் கீழ் வந்தால் நாங்களும் இணைய தயார்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இனிய பாரதி

(வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் பிரதிநிதித்துவத்தை அம்பாறை மாவட்டத்தில் உறுதிப்படுத்த அனைத்துகட்சிகளும் ஒரு குடையின் கீழ் வந்தால் இணைந்து போட்டியிட தயார். தவறினால்நாங்கள்சுயேச்சையாக தனிவழி நின்று தேர்தலில் போட்டியிட்டு ஆளுங்கட்சியுடன் இணைந்து மக்களுக்கான அபிவிருத்தி பணியாற்றுவோம்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்தார்.

அம்பாறை ஊடகங்களுடனான விசேட சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

"எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.ஏனெனில் கடந்த கால தேர்தலில் அம்பாறை மாவட்டத்திற்கு கிடைக்க வேண்டிய தமிழ்பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு பல்வேறு தரப்பினரும் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்து எமது மக்களின் வாக்குகளை சிதறடித்தனர். இம்முறையும் அவ்வாறு எமது பிரதிநிதித்துவத்தை இழந்து விடாமல் இருப்பதற்கு சகல கட்சிகளும் ஒன்றிணைய சகலரும் ஒத்து ழைப்பு செய்ய முன்வர வேண்டும்.

ஆனால் இன்று வரை எவரும் ஒன்றிணைவதற்கு முன்வராத சந்தர்ப்பத்தில் மக்களின் ஆதரவுடன் சுயேட்சையாக களமிறங்கி தமிழ்பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் தயங்க மாட்டேன். இன்றைய சூழலில் பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற நிலைமையே அம்பாறை மாவட்ட தேர்தல் களநிலவரங்களில் தெரிகின்றது. இந்த தேர்தலை பொறுத்தவரை பொதுமக்கள் ஒரு தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விகிதாசார தேர்தல் காரணமாக அனைத்து கட்சிகளும் தங்களது நலனை நோக்காகவும் தேசியப்பட்டியலை இலக்காகவும் நோக்கிபயணிக்கின்றார்களே அன்றி மக்களின் நலனில் அக்கறையின்றி காணப் படுகின்றனர்.

இது தவிர பொது கட்டமைப்பு ஒன்றின் ஊடாக நாங்கள் போட்டியிடுவதன் ஊடாக மக்களின் விருப்பத்தை பெற முடியும். அத்துடன் 35 ஆயிரம் வாக்குகளை இத்தேர்தலில் பெறுவது தான் எமது இலக்காக உள்ளது. கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்ட கருணா அம்மான் தந்த பாடம் தான் இவ்வாறான நிலைமையினை நாம் எதிர் நோக்க காரணமாகின்றது. எனவே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள எதிர்வரும் தேர்தலில் போட்டியிட உள்ள கட்சிகள் தரப்பினர் சிந்திக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.




# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிறு முயற்சியாளருக்கான சந்தை

(எம் எப் நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் உள்ளூர் தொழில் முயற்சி யாளர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு காலாண்டுக்கான ஆைமெ கயசை நிகழ்வானது 2004.10.03 ஆம் திகதி பிரதேச செயலக புசநநவீயசம வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஷாபிர் கலந்து கொண்டு பொருட்களை பார்வையிட்டதுடன் கொள்வனவும் செய்தார்.

மேற்படி நிகழ்வில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# நெல்லியடியில் ஆடையகம் நள்ளிரவில் தீவைத்து எரிப்பு

யாழ்ப்பாணம் - நெல்லியடியில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள ஆடையகமொன்று வன்முறைக் கும்பலினால் நேற்று இரவு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

மூன்று பேர் கொண்ட குழு துணிகரமான முறையில் ஆடையகத்தை சேதப்படுத்தி தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதன் காரணமாக பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த ஆடையகத்தில் சில வாரங்களுக்கு முன்பும் நுழைந்த வன்முறைக் கும்பல் தீ வைக்க முயன்று தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (001)

# பாடசாலை மாணவன் அடித்துப் படுகொலை

தாக்குதலுக்கு இலக்கான 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை - மடவலவுல்பத்த பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மடவளை - நாலந்தவத்தை பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவன், நண்பர்கள் இருவருடன் மடவலவுல்பத்த பிரதேசத்துக்குச் சென்றிருந்தபோதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நண்பர் ஒருவரின் காதலியைச் சந்திப்பதற்காகக் சென்றிருந்தபோது, காதலியின் தந்தை மற்றும் சகோதரர் உள்ளிட்ட குழுவினர் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த மூன்று மாணவர்களும் நாலந்தவத்தை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 55 வயதுடைய காதலியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்



# இஸ்ரேல் மீதான ஈரானின் ஏவுகணை தாக்குதலால் உச்சகட்ட பதற்ற நிலை



**இஸ்ரேலில் உள்ள பாதுகாப்பு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும்அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை விரைவில் கொன்று விடுவோம் என ஈரான் உளவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரான்ஸ், இஸ்ரேல்அழைப்பின் பேரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் நேற்று நடைபெற்றது.**

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், இஸ்ரேலுக்கு முழு ஆதரவாக இருப்போம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமருக்கு ஈரான் கொலை மிரட்டல் விடுத்துள்ளதால் மத்திய கிழக்கு பகுதியில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கு பகுதியில் உள்ள இஸ்ரேல், பாலஸ்தீனம் இடையே நீண்டகாலமாக மோதல் நீடிக்கிறது. இந்நிலையில், கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் திகதி பாலஸ்தீனத்தின் காசா பகுதியைச் சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதில்ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதையடுத்து, கடந்த ஓராண்டாக காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு நடுவே, ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் வடக்கு இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. இதையடுத்து, கடந்த சில வாரங்களாக இஸ்ரேல் ராணுவம் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை குறிவைத்து வான்வழி தாக்குதலை நடத்தியது. கடந்த 27-ம் தேதி லெபனான் தலைநகர் பெய்ஷரூட்டில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இந்நிலையில், இஸ்ரேல் ராணுவம் தெற்கு லெபனான் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் தரைவழி தாக்குதலை தொடங்கியது.

### இடைமறித்த அயன் டோம்

இதனிடையே, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்கள் மீது ஈரான் ராணுவம் நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கும் மேற்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதுகுறித்து இஸ்ரேல் ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், "ஈரான் 180 ஏவுகணைகளை வீசியது. அவற்றை எங்கள் நாட்டின் அயன் டோம் சாதனங்கள் இடைமறித்து அழித்தன. எனினும், சில ஏவுகணைகள் இஸ்ரேல் பகுதியில் விழுந்தன. இதில் சிலர் காயமடைந்தனர்" என கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஈரான் புரட்சிகர படை (ஐஆர்ஜிசி) வெளியிட்ட அறிக்கையில், "ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் எங்கள் தளபதி அபாஸ் நில்போரோஷான் ஆகிய இருவரையும் கொன்றதால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினோம். டெல் அவிவ் நகரைச் சுற்றியுள்ள 3 ராணுவதளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். 90 சதவீத ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கை தாக்கின" என தெரிவித்துள்ளது. ஈரான் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறும்போது, "ஈரான் பெரிய தவறை செய்துள்ளது. இதற்கு அந்த நாடுபெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும்" என்றார்.

எச்சரிக்கையை மீறி நடந்த இந்த தாக்குதலால் அமெரிக்கா ஆவேசம் அடைந்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நேற்று கூறும்போது, "ஈரான் ஏவுகணைகளை இடைமறித்து தாக்க இஸ்ரேல் ராணுவத்துக்கு உதவுமாறு அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்க ராணுவத்துக்கு உத்தரவிட்டிருந்தேன். இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவாக உள்ளது. தேசிய பாதுகாப்புக் குழு இஸ்ரேல் அதிகாரிகள் மற்றும் அங்குள்ள அமெரிக்க ராணுவ அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளது" என்றார்.

### அமெரிக்க எச்சரிக்கை

மேலும் இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக தாக்குதல் நடத்தினால் மிகக் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார். இஸ்ரேல் ராணுவம் லெபானானின் தெற்கு பகுதியில் 2-வது நாளாக நேற்றும் தரைவழி தாக்குதல் நடத்தியது. மேலும் கூடுதல் ராணுவவீரர்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் லெபனான் எல்லையில் உள்ள சுமார் 40 கிராம மக்கள்வெளியேற வேண்டும்என இஸ்ரேல்கேட்டுக்கொண்டுள்ளது. இந்நிலையில், 3 கேப்டன்கள்உட்பட 8 வீரர்கள் உயிரிழந்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலவரத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். தேவையின்றி இந்தியர்கள் யாரும் ஈரானுக்கு செல்ல வேண்டாம். ஈரானில் தங்கியிருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அங்குள்ள இந்திய தூதரகத்துடன்தொடர்பில்இருக்க வேண்டும். இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக, இந்திய தூதரகம் இஸ்ரேல் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருகிறது" என கூறப்பட்டுள்ளது.

ஈரான் தாக்குதல் நடத்திய பிறகு, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாதுகாப்புத் துறைக்கான அமைச்சரவைக் குழுவுடன் ஆலோசனை நடத்தினார். இதில் ஈரானுக்குதக்க பதிலடி தருவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும்அமெரிக்க அதிபர் ஜோபைடனுடனும் பெஞ்சமின் நெதன்யாகு ஆலோசனை நடத்த உள்ளார். குறிப்பாக, ஈரானின்எண்ணெய், எரிவாயு மற்றும் அணு உலை தொடர்பான கட்டமைப்புகள் மீது தாக்குதல்நடத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன்மூலம் அந்த நாட்டின்பொருளாதாரம்சீரழியும்என எதிர்பார்க்கப்படுகிறது. இஸ்ரேலில் உள்ள பாதுகாப்பு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும்அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை விரைவில் கொன்று விடுவோம் என ஈரான் உளவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே பிரான்ஸ், இஸ்ரேல்அழைப்பின் பேரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய கிழக்குபகுதி நிலவரம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

### இலங்கையர்கள் நிலை

இதேவேளை, இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ள நிலையில், இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது. மேலும், இஸ்ரேலில் உள்ள சகல இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளதாக அங்குள்ள இலங்கை தூதரகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ள இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார, இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் தொடர்பாக தொடர்ந்தும் அவதானத்துடன் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஈரான் தரப்பினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் பதிவிட்டுள்ளார்.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் உறவினர்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை என்றும் டெல் அவிவ் விமான நிலையத்தின் விமான போக்குவரத்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், மறு அறிவித்தல் வரை இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு, தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் தேவையான உணவு, மருந்து மற்றும் குடிநீர் என்பவற்றை வைத்திருக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தமது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் குறித்த அறிக்கை காணாமல்போனது எவ்வாறு?

## கேள்வி எழுப்புகிறார் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சனல் 4 முன்வைத்த குற்றச்சாட்டுகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கை காணாமல்போயுள்ளது என கொழும்பு மறைமாவட்டத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுனந்த தேசப்பிரிய எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மர்மங்கள் குறித்த நூல் தொடர்பான ஆய்வு ஒன்று நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அருட்தந்தை இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தது அவர் அதனை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்தார் அவர்களிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையே காணாமல்போயுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உயிர்த்தஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி குறித்தும் பல முக்கியமான விடயங்கள் குறித்தும் விபரங்கள் இடம்பெற்றிருந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். இந்த விடயங்கள் அம்பலமானால் பல அரசியல்வாதிகளின் முகத்திரை கிழியும்,பல அரசியல்வாதிகள் சிறைசெல்லநேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கம்உரிய விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலை முன்னெடுத்த குழுவின் தலைவர் ஜஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பில் இருந்த



அபுஹின்ட் என்பவரே இந்த தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு இரண்டு குழுக்களை நியமித்தார். முதலாவது குழு இந்ததாக்குதலிற்கும் இராணுவபுலனாய்வாளர்களிற்கும் தொடர்புள்ளது என சனல் 4 முன்வைத்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டது.

உயர்த்த ஞாயிறு தாக்குதல்தொடர்பான விசாரணைகள் ஐந்து வருட காலமாக எதற்காக இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது என்று எம்மிடம் பலர் கேட்கின்றார்கள். உயர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னால் பாரியதொரு சதித் திட்டம் இருக்கின்றது. அதனை சட்டமா அதிபர் தபேலா லிபேரா முதல் முதலாகக்கூறியிருந்தார்

நாங்கள் அதனை நம்புகின்றோம். சட்டமா அதிபர் என்ற முறையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அனைத்து அறிக்கைகளும் அவரிடமே இருந்தன. எனவே அரசியல் சதி என்ன என்பதனை அறிந்துகொள்வதே தற்போதுள்ள விடயமாகும். இதில் பல விடயங்களை ஆணைக்குழுக்கள் தேடிக் கண்டுபிடித்துள்ளன. ஆனால், சட்டமா அதிபர்கள் அதனைச் செய்வதில்லை. ஏனைய கொலைகள் தொடர்பாகவும் வழக்கு தாக்கல் செய்வதும் இல்லை. இந்த இடத்திலேயே நாம் சிக்கியுள்ளோம்.

சுனந்த தேசப்பிரிய எழுதிய இந்த நூலில் உள்ள ஒரு விடயத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். அப்துல்ஜமீன்முகமத் என்பவர்தாஜ்சமுத்திரா ஹொட்டலில் குண்டை வெடிக்க வைக்கச் சென்ற போது தொலைபேசி அழைப்பு ஒன்றுக்குப் பதிலளித்தார். அதனை சி.சி. ரி.வி.யில் காணமுடியும். அதன் பின்னரே அவர் தாஜ் சமுத்திரா ஹொட்டலில் இருந்து வெளியேறிச் சென்றார்.

அந்தத் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தியவர் யார் என்பதைக் கண்டுபிடித்தால், இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால், இதுவரை அதனைச் செய்யவில்லை. தெஹிவளை ரொப்பிக்கல் இன் ஹொட்டலில் ஜமீன் மரணிக்க முன்னர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அங்கு சென்றனர். அதாவது அவரது வீட்டுக்குச் சென்றிருந்தனர். அவர் தொடர்பான நீண்ட விசாரணையை புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர். அப்படியானால், அவர் தற்கொலைத் தாக்குதல் ஒன்றைச் செய்யப்போகின்றார் என்பதை அவர்களால் ஏன் அறிய முடியவில்லை?

அவர்கள் அறியாமல் இருந்தார்களா? அல்லது அறிந்துகொண்டே அதனை மறைத்தார்களா என்ற கேள்வி எமக்கு எழுகின்றது. அவர் உயிரிழப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கினார்கள் என்பதே எமது நிலைப்பாடு" என்றும் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ மேலும் தெரிவித்தார்



## ஒற்றையாட்சியை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டுக்கும், மக்களுக்கும் தவறிழைக்காது, பிரிவினைவாதத்துக்குக் கப்பம் வழங்காது, வெளிநாட்டு சக்திகளின் தேவைக்கேற்ப செயற்படாது, நாட்டின் இறையாண்மை மற்றும் ஒற்றையாட்சியைப் பாதுகாத்து பயணித்தால் எவ்வித பிரச்சினையும் இருக்காது. இதற்கு நாட்டு மக்களும் ஆணை வழங்குவார்கள்.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சர்வஜன பலவேகய கட்சியின் சார்பிலேயே நாம் போட்டியிடுவோம். எதிரணிகளுக்கிடையில் கொள்கை ரீதியிலான முரண்பாடுகள் உள்ளன. எனவே, எதிரணி கூட்டணி என்பது சாத்தியப்படமாட்டாது" என்றார் விமல்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராக இன்று வியாழக்கிழமை காலை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

கிராமிய வறுமையை ஒழிப்பதற்காக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மகத்தானது எனவும், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே வறுமை ஒழிக்கப்படுமா? இல்லையா? என்பது தீர்மானமாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் சம்பிரதாயம் மற்றும் பழைய அரசியல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், அரச சேவையின் செயற்பாடு தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி போன்றன தாக்கம் செலுத்தின எனவும் ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

எனவே, வினைத்திறன் மிக்க மக்கள்நல அரச சேவையை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் மோசடி மற்றும் ஊழல் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர் எனவும், அதனைத் தடுப்பதற்காகவே இம்முறை மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரச கட்டமைப்பு முழுவதும் பரவியுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவதாகவும், அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

பிரஜைகளைத் திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன் மற்றும் செயற்றிறன் மிக்க அரச சேவையை உருவாக்க தற்போதைய அரச உத்தியோகத்தரின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரச சேவையில் இதுகாலவரை இடம்பெற்று வந்த அரசியல் பழிவாங்கல், இடமாற்றம், அரச சேவையில் பதவி உயர்வு வழங்காமை போன்ற செயற்பாடுகள் தமது அரசின் கீழ் இடம்பெறாது என வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களை திருப்திப்படுத்தும் வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

எதிர்வரும் நாற்பது நாட்கள் நிலைமாற்ற காலமாகும் எனவும், அந்தக் காலப்பகுதியில் அரச சேவையை வீழ்ச்சியடையாமல் பேணுவதற்கு அரச உத்தியோகத்தர் பாடுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி சூசகமாக தெரிவித்தார்.

முன்பிருந்த அரச தலைவர்கள், அரச அதிகாரிகளை ஊடகங்களுக்கு முன்பாக கேள்வி எழுப்பியது போன்று தான் ஊடகங்களுக்கு முன்னால் அரச அதிகாரிகளைக் கேள்வி கேட்கப் போவதில்லை எனவும், இவ்வாறான ஊடகக் கண்காட்சிகளை தான் ஏற்கவில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார மேலும் தெரிவித்தார்.

அரசு ஊழியரின் கண்ணியத்தைப் பாதுகாத்து குடிமக்கள் திருப்தியடையும் அரச சேவையை உருவாக்கத் தான் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

## காஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய கூட்டணிக்குத் தலைமை வகிக்கவுள்ளார்.

சேவல் சின்னத்தில் களமிறங்கும் என எதிர்பார்க்கப்பட்ட இ.தொ.கா., கேஸ் சின்னத்தில் கூட்டணியாகப் போட்டியிடுவது தொடர்பில் பரீசிலித்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டுள்ளார். ஆனால், இம்முறை அவர் போட்டியிடமாட்டார்.

## ஒரு கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்த துணிகர சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர்.

பணத்தை பறி கொடுத்தவர் சேந்தாங்குளம் பகுதியில் காணியை விற்றுவிட்டு தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சந்தேக நபர்களும் சான்று பொருட்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோபாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பரீட்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டோரின் பெயர்களை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர்ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டார்.

தேர்வு தொடர்பான பல்வேறு மோசடிகளில் ஈடுபட்ட 473 பேர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அவர்கள் எந்த தேர்விலும் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது. வலய பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளும் பட்டியலில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலை காரணமாக பரீட்சைகள் திணைக்களத்தை முழுமையாக மறுசீரமைக்க வேண்டியது அவசியமானது என ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெள்ளவத்தையில் ஆணின் சடலம்

வெள்ளவத்தை கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இன்று வியாழக்கிமை பிற்பகல் வெள்ளவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் 5 அடி 4 அங்குல உயரம் கொண்டவர் எனவும், அவருக்கு 45 வயது இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவர் யார் என்ற விபரம் இதுவரை வெளியாகவில்லை.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மகிமை பொருந்திய நவராத்திரி விரதம்

## இன்று ஆரம்பம்

**வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**



நவராத்திரி பண்டிகை புரட்டாசி அமாவாசை முடிந்து பிரதமை தொடங்கி தசமி வரை கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தில் சிவனுக்கு சிவராத்திரி கொண்டாடுவது போல புரட்டாசியில் ஒன்பது நாட்கள் சக்தியை வழிபட நவராத்திரி பண்டிகை கொண்டாடுகிறோம்.

இந்த ஆண்டு இன்று வியாழக்கிழமை நவராத்திரி தொடங்குகிறது. பத்தாம் நாள் 12 ஆம் திகதியன்று விஜயதசமியுடன் நிறைவடையும்.

பிரதமை தொடங்கி தசமி வரை ஒன்பது இரவுகள் அம்பிகையை அலங்கரித்து சிறப்பாக வணங்குவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது ஐதீகம்.

உலகத்தின் இயக்கத்திற்கு எல்லாம் சக்தி தான் ஆதாரம். அந்த சக்தியை வழிபடுவதே நவராத்திரி திருவிழா. அம்மனை வழிபட்டால் அனைத்து ஆற்றலையும் பெறலாம். சக்தி இல்லை என்றால் இந்த உலகம் இயங்காது. அந்த சக்தியை வழிபடுவதற்காக உருவானதுதான் நவராத்திரி பண்டிகை. நவராத்திரி பண்டிகையின் ஒன்பது நாட்களும் ஒன்பது வகையான அலங்காரம் செய்து வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு அம்மன் ஆலயத்திலும் அம்மனுக்கு தினசரி ஒவ்வொரு வடிவத்தில் அலங்காரம் செய்யப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

அம்மனை சக்தி வடிவமாக இச்சா, கிரியா, ஞான சக்தி என மூன்று சக்திகளாக வழிபடுகின்றோம். வாழ்க்கையில் கல்வி செல்வம் வீரம் ஆகிய மூன்றும் முக்கியம். மூன்றும் கலைமகள், அலைமகள், மலைமகள் என மூன்று சக்திகளை வழிபடுகின்றோம். வாழ்க்கையில் மூன்றும் முக்கியம். வீரத்திற்கு மூன்று நாட்கள், செல்வத்திற்கு மூன்று நாட்கள், கல்விக்கு மூன்று நாட்கள் ஒதுக்கி ஒன்பது நாட்கள் வழிபடுகின்றோம். இதன் மூலம் நமக்கு சக்தி கிடைக்கும் அந்த சக்தியை நாம் நல்ல விசயத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

பிரதமை நவராத்திரியின் முதல் நாளில் தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம். துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்தி நான்காம் நாளில் அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும். பஞ்சமி ஐந்தாம் நாளில் அன்னையை வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற்றவை.

சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங்கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம். அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு என்றாலும் அதில் விசேஷமான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத்தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத்தோடு பூஜித்தால் ஒன்பது நாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள். இந்த ஆண்டு தீமைகள் ஒழிய அம்பிகை அருள் புரிய வேண்டும் என்று அனைவரும் வேண்டிக்கொள்வோம்.



# தைக்வொண்டோ போட்டியில் மீண்டும் சாதனை படைத்தது கல்முனை சாஹிறா





(அஸ்ஹர் இப்றாஹிம்)

இரத்தினபுரி உள்ளக விளையாட்டரங்கில் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கையிலுள்ள பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட தைக்வொண்டோ சுற்றுப் போட்டியில் கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஜே.ஏ.சுரைப் 20 வயதுக்குற்பட்ட ஆண்களுக்கான (Sparring) போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இவர் தொடர்ச்சியாக கடந்த 2022, 2023 ஆம் ஆண்டுகளில் இரு முறை தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கதினை பெற்று தற்போது 3வது முறையாகவும் தேசியத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022ம் ஆண்டு கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி 14 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் Overall Boys champion ஆக தெரிவு செய்யப்பட்டதோடு 2023 இல் ஒரு வெள்ளி உட்பட 2 வெண்கல பதக்கத்தினையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றியைப் பெற உதவிகளையும் மாண வர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கல்லூரி முதல்வர் ஜனாப் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் இணைப்பாட விதானத்திற்கு பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல்.எம். தன்ஸில், அர்ப்பணிப்புடன் தமது திறமைகளை வெளிப்படுத்தி இவ்வெற்றிகளை பெற்ற மாணவர்கள், பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் (Taekwondo and Karate) பயிற்றுவிப்பாளர் யூ.எல்.எம்.இப்றாஹிம் , உதவி பயிற்றுவிப்பாளர்களான ஏ.பி.ஏ.ஸிஹாப், எம்.எச்.ஏ.ஹஸீன், .ஏ.பி.ஏ.ஹம்தாத், ஜே.ஏ.சுமைத், ஏ.எல்.ஏ.எம்.அப்ரி,ஏ. பி.ஏ.ஹமீம் விளையாட்டு பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம். அமீர், உடற்கல்வி பிரிவு ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2024இல் வெளியிடப்பெற்றது.